| Date of Meeting of the Council | MCR No | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 27.03.2020 | | ***2020–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் தேதி திங்கட்கிழமை மதியம் 03.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.*** <br><br> **தனி அலுவலர்,** <br> **நகராட்சி அலுவலகம்,** | |
| 27.03.2020 | 471 | **<u>பொருள் எண். 1</u>** <br> திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 31/செ.ம.தொ/2020 நாள். 07.02.2020 மற்றும் இயக்குநர் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அவர்களின் கடிதம் ந.க.எண். 1211/விளம்பரம்/2020 நாள். 05.02.2019 –ன்படி துவாக்குடி நகராட்சி தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகளை மாலைமலர் நாளிதழில் சாதனை மலரில் சிறிய அளவில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற பில் பட்டியல் எண். TRY-D 20020165 நாள். 20.02.2020–ன்படி தொகை ரூ.9744/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. <br> **அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். <br> **ந.க.எண். 903/2019/இ1** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |
| 27.03.2020 | 472 | **<u>பொருள் எண். 2</u>** <br> நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 15.05.2018–ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நுண் உரம் தயாரிக்கும் மையம் ( Micro Compost Centre ) அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறைகள் கடிதம் எண். ஆ4/924/2017 நாள். 03.10.2019 –ல் துவாக்குடி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 1 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தினை ஒதுக்கீடு செய்து முன் நுழைவு அனுமதி வழங்கி ஆணை வெளியிட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் கீழ்கண்ட விவரப்படி இந்நகராட்சி பகுதியில் உருவாகும் மக்கும் திடக்கழிவுகளை கொண்டு நுண் உரம் தயார் செய்ய Micro Compost Centre அமைக்க ரூ. 75.00 லட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 4235–2/2018/தி3 நாள். 19.02.2020 –ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து உரம் தயாரிக்கும் மையம் ( Micro Compost Centre ) பணி மேற்கொள்ள கட்டிட வடிவமைப்பு வரைபடம் தயார் செய்து கொடுக்க தேசிய தொழில் நுட்ப கழகம், துவாக்குடியிலிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் எண்.98 நாள்.16.03.2020–ன்படி தொகை | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td>ரூ. 41300/– வழங்கவும் மற்றும் மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கும்.<br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண். 1307 /2019/ இ1</td><td></td></tr>
<tr><td>27.03.2020</td><td>473</td><td><u>பொருள் எண். 3</u><br>துவாக்குடி நகராட்சியில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2019–20 –ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணி மேற்கொள்ள 03.03.2020 – தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்ததாரர்<br>பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சி 8–வது வார்டு வ.உ.சி நகரில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல்</td><td>10.00</td><td>R. சிவக்குமார்<br>M. பொன்னுசாமி</td><td>மதிப்பீட்டை 0.07 % குறைவு<br>மதிப்பீட்டை 0.45% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள R. சிவக்குமார் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 123/ 2020 /இ1</td><td>அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது.</td></tr>
<tr><td>27.03.2020</td><td>474</td><td><u>பொருள் எண். 4</u><br>2019–20ம் ஆண்டிற்கான 14–வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதியில் தார் சாலைகள் அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 10.01.2020–ம் தேதி Business Standard ஆங்கில தினசரி நாளிதழ் மற்றும் தினபூமி தமிழ் தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்தமைக்கு அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்சி, சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் எண்.AAA/0626/19-20 நாள்.14.01.2020 படி ரூ.16,884/– தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்க ஆணையரின் அனுமதிக்கு.<br><br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1651/ 2019 /இ1</td><td>அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 27.03.2020 | 475 | **<u>பொருள் எண். 5</u>**<br>நகராட்சி அலுவலகத்தின் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஈசேவை மையம் மற்றும் செயல்பட்டு கொண்டிருக்கும் அம்மா உணவகத்திற்கு முன்புறம், பின்புறம் மற்றும் கட்டிடத்தின் உள்புறத்தில் புதிதாக கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கும், அலுவலக வளாகத்தின் முதல் தளத்தில் பொருத்துவதற்கும் தயார் செய்யப்பட்ட மதீப்பீடு ரூ. 2,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 410 /2020/ இ1** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |
| 27.03.2020 | 476 | **<u>பொருள் எண். 6</u>**<br>துவாக்குடி நகராட்சியில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 மற்றும் 5 ல் அமைந்துள்ள Onsite Compost Centre (OCC) ல் Napkin incinerator மற்றும் வார்டு எண் 5ல் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு Napkin incinerator மற்றும் Sanitary Vending Machine அமைப்பதற்கு செலவினம் ரூ. 3,85,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கும் மேலும் இப்பணி அவசரப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி கோரப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எம்.பொன்னுசாமி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1354 / இ1 / 2019** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |
| 27.03.2020 | 477 | **<u>பொருள் எண். 7</u>**<br>துவாக்குடி நகராட்சி –பொது சுகாதாரப்பிரிவு கொரோனா –19 வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அரசு கூடுதல் இணை செயலாளர் ந.க.எண் 6792/MA/V(2)/2020-1 நாள்.13.03.2020ன் படி நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/J–2020 நாள்.15.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் மின்னஞ்சல் கடிதம் நாள் 16.03.2020ன்படி தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939ன் படி அரசு வெளியிட்டில் (No.118, நாள் 13.03.2020) அறிவிக்கப்பட்ட நோயாக உள்ளதால் (NOTIFIED DISEASE) பொது மக்கள் நலன் கருதி நகர்பகுதி முழுவதும் கிருமி நாசினிகள் தெளித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மேலும் இந்நோய் பெருவாரியாக பரவுகிற நோயாக (EPIDEMIC) உள்ளதால் பொது மக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தண்ணீருடன் கலந்து sodium hypo chloride solution தெளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனத்திடமிருந்து பெற்று பணியை மேற்கொள்ள ஆணையரின் அனுமதிக்கு. மேலும் இப்பணிக்கான உத்தேச செலவினமாக ரூ.3.00 இலட்சம் மன்றம் ஒப்புதலுக்கும். மேற்கண்ட sodium hypo chloride solution வாங்குவதற்கு உண்டான செலவு தொகையினை தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 401/2020/எச்1</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.03.2020</td>
<td>478</td>
<td><u>பொருள் எண். 8</u><br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் 2020–21 பொது நிதியின் (குடிநீர் நிதி) கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சி 1 முதல் 6 வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td></tr>
<tr><td>2.</td><td>துவாக்குடி நகராட்சி 7 முதல் 15 வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 410 /2020/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 27.03.2020 | 479 | **<u>பொருள் எண். 9</u>**<br>துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் **2020–21** ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் வாங்கி கொள்வதற்குண்டான செலவினம் ரூ.**2.50** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 430 /2020/இ1** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |
| 27.03.2020 | 480 | **<u>பொருள் எண். 10</u>**<br>துவாக்குடி நகராட்சியின் அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி, பிரிண்டர்கள் மற்றும் இன்டெர்நெட் மோடம், விபிஎன் மோடம் ஆகியவற்றிற்கு வருடாந்திர பராமரிப்பு **2020–21** ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உண்டான செலவினம் ரூ. **2.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : – 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் பொதுநிதியில் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 430/2020/இ1** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |
| 27.03.2020 | 481 | **<u>பொருள் எண். 11</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 81 Z 3304 வாகனத்திற்கு புதிதாக நான்கு டயர்கள் வாங்க உத்தேச செலவினமாக தொகை ரூ. **50000/–** க்கு மன்றத்தின்அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1238/இ1 /2018** | அலுவலக குறிப்பு அனுமதிப்பட்டது. |